டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய நோக்கும் போக்கும் உங்களுக்குத் தெரிகிறது. அதைப் போல உங்களுடைய நோக்கும் போக்கும் எங்களுக்குத் தெரிகிறது.

(ஆ) பேரவைத் தலைவர் மீது அவதூறு ஏற்படுகின்ற வகையில் ஓர் உறுப்பினர் பேசியது குறித்து

*திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. தங்கள் மீது அவதூறு ஏற்படுகிற வகையில் ஒரு வாக்கியத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர் அப்படிக் குறிப்பிட்டது சரியல்ல. அதனுல் அவர்களே அந்த வாக்கியத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சபாநாயகரைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் குறிப்பிடுகிறேன் என்று யாரும் எண்ணக் கூடாது. என்னைப் போன்றவர்கள் இப்படிக் கேட்பது, சபாநாயகர் இருக்கக் கூடிய அந்த இடத்தைக் காப்பதற்காகத்தான். அந்த நாற்காலியின்மீது களங்கம் ஏற்படக்கூடாது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

நாம் எல்லோரும் சில பிரச்சனைகளை ஆட்சேபனைக் குரியவை என்று கருதும்போது அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுதான் முறை. ஹாண்டே அவர்கள் வேகமாகப் பேசினுர்கள். அவர்கள் திரும்பத் திரும்ப சண்டை போடுவது போல பேசுவது நல்லதல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஆட்சேபகரமான வார்த்தை எதையும் சொல்லவில்லையே. பிரச்சனைகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்து வேகமாகப் பேசுகிறேன். இன்னும் கடுமையாகப் பேசியிருப்பேன். ஆனுல் நான் அப்படிப் பேசவில்லை. டிசிப்ளின்ட்டாகத்தான் பேசினேன். நான் கேட்டது புரியவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். அதற்காக மீண்டும் கேட்க விரும்பினேன். அதல்லாமல் விதியை மீறி நான் எதையும் சொல்லவில்லை. அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருந்தபோதிலும் பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை. ஏன் அனுமதி தரக்கூடாது என்று கேட்டவுடன் சபாநாயகர் ' உங்கள் போக்குத் தெரியும் ' என்கிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத் தெரியும். நாம் வள்ளுவர் படத்தை இங்கே வைத்துக் கொண்டிருக்கிறேம். திருக்குறளில் '' நயனிலன் என்பது சொல்லும் பயனில பாரித் துரைக்கும் உரை '' என்று வள்ளுவர் கூறியிருக்கிருர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்கள் போக்குத் தெரியும் என்று சொன்னால் அது என்னுடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. நான் தவறான வார்த்தை எதையும் பயன்படுத்தவில்லை, அன்பார்லிமென்டரி வெர்டு ஒன்றும் நான் சொல்லவில்லை. நான் ஆவேசமாகப் பேசினாலும் அது பேசுகின்ற கருத்தின் அடிப்படையில்தான் இருக்கும். அன் பார்லிமென்டரி வார்த்தைகளை அப்போதும் நான் உபயோகிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபை நடவடிக்கைக் குறிப்பை பின்னால் பார்க்கப் போகிறீர்கள்; அப்போது தெரியும்.

"நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

என்பதை நடவடிக்கைக் குறிப்பைப் படிக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

(இ) உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் விதிமுறைகள் இல்லாதபோது, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என பேரவை முன்னவர் அறிவித்தது முறைதானா என்பது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். விதி 83, பிரிவு 3-ன்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுவிட்டு, தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker."

என்ற விதிமுறையின்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். நம்முடைய இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 195-ல் விவரமாக இருக்கிறது.

"Members of the Legislative Assembly and the Legislative Council of a State shall be entitled to receive such salaries and allowances as may from time to time be determined, by the Legislature of the State by law ...."

என்று கிளியராக இருக்கிறது. நேற்று நம்முடைய சட்ட மன்ற மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் மூன்று முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்